

We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!



# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 30.03.2020


Main Office @

**WeShine Study Circle**

Chrompet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்








# தமிழக நிகழ்வுகள்

- கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்க மாவட்டந்தோறும் பல்வேறு அரசு, தனியார் துறையினரைக் கொண்ட "நெருக்கடி கால மேலாண்மைக் குழு" அமைக்கப்படும் என்று முதல்வர் பழனிசாமி அறிவித்துள்ளார்.
    - வரும் 2 மாதங்களில் பிரசவிக்க உள்ள சுமார் 1.5 லட்சம் தாய்மார்கள் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உதவிக்கு **102, 104 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம். முதல்வர் பழனிசாமி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**

- **புதுச்சேரி** சட்டப்பேரவையில் இடைக்கால பட்ஜெட் மார்ச் 30 அன்று தாக்கல் ஆனது. அரசின் செலவினங்களுக்காக அடுத்த 4 மாதத்திற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையை நிதித்துறை பொறுப்பு வகிக்கும் முதல்வர் நாராயணசாமிதாக்கல் செய்தார்.
    - அதில் அரசின் அடுத்த **3 மாத செலவினங்களுக்காக ரூ.2,042 கோடிக்கான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.**
    - **செய்திகள் துளிகள்:**
        - ஆட்சிக்காலம் 5 வருடங்கள்
        - தலைமை அவைத்தலைவர் V.P. சிவக்கொழுந்து, 2019
        - துணை அவைத்தலைவர் M.N.R. பாலன், இதேகா 2016

We Shine Academy™

# தேசிய நிகழ்வுகள்

- கெரோனா நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, பிரதமரின் அவசர கால நிதிக்கு அதானி குழுமம், ஜேஎஸ்டபிள்யூ ஆகிய நிறுவனங்கள் தலா ரூ.100 கோடி நிதியுதவி அளித்துள்ளது.
    - இதுகுறித்து அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், '**கொரோனாவுக்கு எதிரான யுத்தத்தில் அரசுக்கு உதவுவதற்காக, பிரதமரின் அவசர கால நிதிக்கு அதானி ஃபவுண்டேஷன் சார்பில் ரூ.100 கோடி நிதியுதவி அளிக்கப்படுகிறது' என்று தெரிவித்துள்ளார்.**
    - **செய்தி துளிகள்:**
        - டி-சீரிஸ் திரைப்பட தயாரிப்பு நிறுவனத்தின் உரிமையாளர் பூஷண் குமார் அவசர கால நிதிக்கு ரூ.11 கோடி வழங்குவதாக அறிவித்துள்ளார். இதுதவிர, மகாராஷ்டிர முதல்வர் நிவாரண நிதிக்கு ரூ.1 கோடி நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளார்.
        - திரைப்பட தயாரிப்பாளர் முராத் கேதானி ரூ.25 லட்சமும் தொலைக்காட்சி பிரபலமும் நடிகருமான மணீஷ் பால் ரூ.20 லட்சமும் நிதியுதவி அளிப்பதாக அறிவித்துள்ளனர்..

- திருச்சியில் புரபெல்லர் டெக்னாலஜிஸ் (propeller technologies ) என்ற ரோபோட்டிக் நிறுவனம் இயங்கி வருகிறது . சமீபத்தில் இந்த நிறுவனம் **"ஜாபி" (zafi robot)என்ற ரோபோக்களை தயாரித்து**

WeShine Academy™

வருகிறது.

- இந்நிலையில் இந்த நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி, முகமது ஆஷிக் ரகுமான், கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு பயன்படுத்த முன்வந்தால், இலவசமாக வழங்க தயார் என்று தெரிவித்துள்ளார்.
- இதில் ஜாபி, மருத்துவர்களுக்கு உதவியாகவும், நோயாளிகளுக்கு தேவையான மருந்து உணவு போன்றவற்றை வழங்க பயன்படுத்தலாம்.
- **செய்தி துளிகள்**
    - இது மொபைல் மூலமாகவும், வாய்ஸ் இன்ட்ராக்டிவ் மூலமாகவும் செயல்படும் வகையில் உருவாக்கப்பட்டுளது என கூறினார்.
    - இது 1 கி.மீ வரை சுமார் 20 கிலோ பொருட்களை கொண்டு செல்லும் திறனுடையது என்றும் அவர் கூறியுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம் கண்டுபிடித்த 3டி பிரிண்டட் சுவாசக் கருவியின் செயல்பாடு திருப்திகரமாக அமைந்துள்ளதைத் தொடர்ந்து, 100 சாதனங்களை கோரி சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை ஆணைக் கொடுத்துள்ளது.
    - மருத்துவமனை முதல்வர் ஆர். ஜெயந்தி இச்சாதனத்தை ஒற்றை சுவாசக் கருவியில் இணைத்து நான்கு நோயாளிகளுக்குப் பொருத்தினார்.

- **செய்தி துளிகள்**
  - **சாஸ்த்ரா ஆய்வகம், மாதிரி ஆய்வு உள்ளிட்டவற்றில் மேற்கொண்ட சோதனையில் மனித உடலில் கொரோனா வைரஸ் முதல்கட்ட நுழைவைத் தடுக்கக் கூடியது.**

## திருக்குறள்

**குறள் எண் :** 153

**குறள் பால் :** அறத்துப்பால்

**குறள் இயல் :** இல்லறவியல்

**குறள் அதிகாரம் :** பொறையுடைமை

**"இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்**
**வன்மை மடவார்ப் பொறை."**

**விளக்கம் :**

வறுமைகளில் மிக்க வறுமை விருந்தினரை வரவேற்காது விடுதல் வலிமைகளுள் சிறந்த வலிமை அறிவின்மையால் தீமை செய்பவரைப் பொறுத்துக் கொள்ளுதல்.